

# திறவுகோல்

2054

கார்த்திகை

மாத இதழ்

**வெளியீடு:**

**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் மாணவர்கள் - பகுதி 4 (சங்கடங்கள் போக்கிய சிறுமி சஞ்சனா!)

சிரிப்பு எப்படி வந்தது என்பது உங்களில் எத்தனைப் பேருக்குத் தெரியும்?

சொல்வேந்தர் சுகி சிவம் ஒரு காணொலியில் சொல்லக் கேட்டது இது.

அதாவது மனிதக் குரங்குகள் ஏதோவொரு காரணத்தினால் தமக்குள் சண்டையிட ஆயத்தம் ஆகும் போது தம் இரு கைகளாலும் வாயை அகல விரித்து தம் கூரிய பற்களைக் காட்டிப் பயமுறுத்தும். இதை இருதரப்பும் செய்யும்.

குரங்குகளின் இந்த அச்சமூட்டும் செய்கையைப் பார்த்து மனிதன் சிரிக்கக் கற்றுக் கொண்டான் என்பார்.

அதுசரி. அந்தக் கதை இங்கு எதற்கு என்று நீங்கள் முணுமுணுப்பது எனக்குக் கேட்காமல் இல்லை.

தோ! வருகிறேன்.

அவள் பெயர் சஞ்சனா. மூன்றாம் வகுப்பு தான் படிக்கிறாள். படுசுட்டி. படிப்பிலும் நல்ல கெட்டி. காலை, மாலை தினசரி நடக்கும் வழிபாட்டுக் கூட்டத்தில் அவள் நேராக நிமிர்ந்து நிற்கும் அழகே அழகு!

ஒரு மாலைப் பொழுதில் அவளைக் கூப்பிட்டு பள்ளியில் உள்ள அனைவருக்கும் முன்மாதிரியாக நிற்கச் செய்தது இப்போது நினைத்தாலும் எனக்குள் பெருமிதம் பீறிடும்.

"யப்பா கண்ணுகளா எல்லாரும் இந்த சஞ்சனா பாப்பா போல செய்யவும்!"

அந்த எலுமிச்சை நிற முகத்தில் மிளிர்ந்த புன்முறுவல் காணக் கிடைக்காத காட்சி.

பொதுவாக மாலை நேரங்களில் பள்ளி மாணவர்களும் மாணவிகளும் அவரவர் வகுப்பு நிலைக்கேற்ப விளையாடிக் கொண்டிருக்க...

அந்தப் பள்ளி விளையாட்டு மைதானம் முழுதும் அல்லோலக்கல்லோலப் படும். கபடி, கோ கோ, சில்லுக்கோடு, கண்ணாமூச்சி, பல்டியடித்தல் என்று ஓடியாடி விளையாடிக் கொண்டிருப்பதை ஒரு சிலர் எதிலும் கலந்து கொள்ளாமல் அனைத்தையும் சிவனேயென்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பர். பள்ளி வராண்டாவில் மாணவர்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கும் என்னைப் போன்ற ஆசிரியர் ஆசிரியைகளுடன்.

ஆடிமுடித்த களைப்பில் சஞ்சனாவும் அவ்வப்போது என் அருகில் வந்து அமர்ந்து கொண்டு என்னைப் போலவே அவளும் அனைத்தையும் உற்று நோக்கிக் கொண்டிருப்பாள். ஒரு பெரிய மனுசி போல.

ஆசிரியர்கள் சிரித்துப் பேசியதும் பேசிச் சிரித்ததும் அதுவொரு காலம் என்றாகி

விட்டது. யாரைப் பார்த்தாலும் ஒரே புலம்பல் தான். பணியால் மன இறுக்கமா? மன இறுக்கத்தினூடாகப் பணியா? எளிதில் விடை சொல்ல முடியாத கேள்விகள்.

ஒவ்வொருவருக்குள்ளும் அவ்வளவு மனப்புழுக்கம்!

கால் வைக்கும் இடமெல்லாம் கண்ணிவெடி என்று அங்கலாய்ப்பார்களே!.. அதேதான். யாரை நொந்து என்ன பயன்? ஒரு புண்ணியமும் இல்லை.

பள்ளி வராண்டாவில் வழக்கம் போல் வந்தமர்ந்தேன்.

யார் யாரோ பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

"சஞ்சனா வர்ல?"

"அந்த அக்கா இன்னைக்கு லீவ்வு சார்!"

ஒன்றாம் வகுப்பு பொடுசு ஒன்று முந்திரிக்கொட்டை போல முந்திக்கொண்டு பதிலளித்தது.

அக்கா. இந்த வார்த்தையைக் கொண்டு வர எவ்வளவு மெனக்கெடல்கள்...

எட்டாம் வகுப்பு மாணவனை ஒர் ஒன்றாம் வகுப்பு சிறுவனும் சரி. சிறுமியும் சரி. டா, டீ போட்டுக் கூப்பிடுவது அங்கு வெகு இயல்பாக இருந்தது.

டா, டீ எனக் கூப்பாடு போடும் நபர்களிடம் அன்பாகவும் சற்று கடுமையாகவும் நடந்து அவ்வாறு சொல்லக்கூடாது என்று அறிவுரை சொல்லி அனுப்பியது மட்டுமல்லாமல் அவ்வப்போது கண்காணிப்பும் நடந்தது.

அண்ணன் அக்காள் என்று பிறர் அழைக்கக்கேட்டு உள்ளுக்குள் மகிழ்வுறும் வாய்கள் அனைத்தையும் இந்த மரியாதை நிலைத்திட தம்பி, தங்கை என்று அழைத்திடவும் அறிவுறுத்தினேன்.

குழந்தைகள் இதுபோன்று உறவு சொல்லி அழைப்பதைப் பார்ப்பதில் அலாதி இன்பம் தரும். அதிலும் பல்வேறு சிக்கல்கள்.

"சார்! நீங்க என்னைய அக்கான்னு தான கூப்புட சொன்னீங்க. இந்த தங்கச்சி பாப்பா என்ன வூட்ல வாடி போடின்னு கூப்புடுது!"

கையோடு வலுக்கட்டாயமாக அழைத்து வரப்பட்ட சிறுமியின் முகத்தில் ஏகப்பட்ட கலவர ரேகைகள். அழுகை நுழைவு வாயிலில் நின்றுகொண்டிருந்தது. அது எப்போது வேண்டுமானாலும் கீழிருங்கக் கூடும்.

"அப்படியா பாப்பா?!"

அன்பான அதட்டல். தெம்பைக் கொடுக்க...

"ஸ்கூல்ல நான் அக்கான்னு தான் கூப்புடுவேன் சார்!"

கண்களால் இவள் சொல்வது சரிதானா என்பது போல் ஏறிட்டதற்கு பதிலாக ஆமாம் என்பது போல் தலையாட்டினாள் அந்தப் பெரியவள்.

"அப்ப வீட்ல?!"

அந்தச் சின்னஞ்சிறு மணியிடம் அதற்கு பதிலில்லை. பேந்தப் பேந்த விழித்தாள். திராட்சை உருள்வது போல் அவளது விழிகள் விரிந்தன.

"வாடி போடின்னு தான் சார் இந்தப் பொண்ணு கூப்டும்."

பாதிக்கப்பட்ட குரல் வேகவேகமாக வெளிவந்தது.

தாம் செய்தது பெரிய குற்றம் என்பதாக உணர்ந்தவள் என்னைப் பாவமாகப் பார்த்தாள். எனக்கு என்னவோ போலிருந்தது. குற்றத்தை உணர்ந்து ஒப்புக் கொள்ளச் செய்த நான் மன்னிக்கவும் கற்று வைத்திருந்ததால் இப்படியாக அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தேன்.

"இனி அப்படி கூப்பிடக் கூடாது..."

சரி என்பது போல் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை போன்று இப்படியும் அப்படியும் தலையாட்டினாள்.

"இனிமே இப்படி நடக்காது. சரிதானே?!"

ஏதோ தமக்குப் பெரிய நீதி கிடைத்துவிட்டதாக உள்ளூர எண்ணிக்கொண்டு சிரித்தவாறே சிட்டாகப் பறந்தாள். நான் ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அன்று ஏனோ எனக்கு மனசே சரியில்லை. அதற்கான காரணமும் இன்னதென்று என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது. இனி ஆசிரியராக வாழ்வது என்பது எளிதான காரியமல்ல என்று.

எல்லா வகையிலும் பணி நெருக்கடிகள்.

அதிகப்படியான பாடப்பொருள்ககள்... வெற்று விளம்பர கற்பித்தல் முறைகள்...பொருந்தாத மதிப்பீட்டு முறைகள்... வருகைப் பதிவு முதற்கொண்டு அனைத்தையும் இணையதளத்திலும் செயலியிலும் பதிவேற்ற வேண்டிய கட்டாயங்கள்... மூச்சு விடக் கூட நேரமின்றி ஓடிக் கொண்டிருக்கும் எந்திரத்தனம்... இது போதாதென்று பல்வேறு சம்பள இழப்புகளுக்கு மத்தியில் வாழும் அத்தக்கூலிப் பிழைப்பு... மாணவர்களிடம் மலிந்துவிட்ட பிறழ் நடத்தைகள்... சமுதாயத்தில் ஆசிரியர் மீதான மதிப்புகள் குறைந்து பெருகும் தவறான கண்ணோட்டம்... எனப் பலவிதமான எண்ணவோட்டம் என்னை ஒரு துயரப் பாதையில் அழைத்துச் செல்ல...

எனக்கு அழுகையே வந்து விடும் போலிருந்தது!

அந்த விளையாட்டுப் பொழுதில் சிறகு முளைத்த பட்டாம்பூச்சிகளாகச் சீருடை அணிந்த மாணவர்கள் வட்டமிட்டு பறக்கத் தொடங்கியிருந்தார்கள்.

அந்தச் சட்டம் இந்தத் திட்டம் என

ஏதேதோ அவிழ்த்துவிட்டு கடைசியில் இந்தப் பாவிகள் ஆசிரியர்களையும் குழந்தைகளையும் பிரித்து வைத்து விட்டார்களே!...

கண்கள் பனித்தன. எங்கோ பயணித்த நினைவைத் திரும்ப தட்டி எழுப்பியது ஒரு மெல்லிய குரல்.

சஞ்சனா!

"ஏய்! இங்க எப்ப என்கிட்ட வந்து உட்கார்ந்த?"

அவள் வழக்கமாக என் அருகில் வந்து அமர்ந்தது சுத்தமாக எனக்கு நினைவிலில்லை. நான் கொஞ்சநேரம் உணர்வற்றுக் கிடந்ததை அப்போதுதான் உணர ஆரம்பித்தேன். எனக்கே என் மீது வெட்கமும் கோவமும் ஏற்பட்டது. இதுபோன்று இனியொரு முறை நடக்க ஒருபோதும் அனுமதிக்க கூடாது என்று முடிவெடுத்துக் கொண்டேன்.

"நான் அப்பயே வந்துட்டேன். ஒங்களுக்குத் தெரியாதா?"

எனக்கே என்னைப் பிடிக்காமல் போனது அந்த நொடி தான்.

"ஸாரிமா நான் கவனிக்கல!"

பிள்ளைகளிடம் நான் எப்போதும் கௌரவம் பார்ப்பதில்லை. அதேநேரத்தில் என் தரப்பில் தவறு என்று தெரிந்தால் உடன் குழந்தைகளிடம் மன்னிப்பு கேட்கவும் தயங்கியதில்லை.

"அது கெடக்கட்டும்! இன்னைக்கு ஒன்னு கிளாஸுல நடந்துச்சு! தெரியுமா?"

"எனக்குத் தெரியாதே!... ஆமா அப்படி என்ன நடந்துச்சு?"

புருவம் உயர்த்திக் கேட்க, அவளோ_

"இந்த பரணிநிஷா இருக்குல்ல..."

"ஆமா. இருக்கு. அதுக்கென்ன?!"

"அது சார்...அது வந்து சார்...எங்க சார் மாங்காய்னு எழுதச் சொன்னாங்களா!..."

இன்னும் சொல்லி முடிக்கவில்லை. அதற்குள் இலவம் பஞ்சு போன்று வாய்விட்டு வெடித்து பொலபொலவெனச் சிரிக்க ஆரம்பித்தாள். அடக்க மாட்டாமல். மேலும் வாயை பொத்திக்கொண்டு நினைத்து நினைத்து தமக்குள்ளாகப் பூரித்துக் கொண்டிருந்தாள்.

எனக்கு ஏதும் விளங்கவில்லை. தலை வெடித்து விடும் போலிருந்தது.

"முழுசா சொல்லி விட்டுத் தான் சிரியேன்."

என்றதும், என்னைக் குறுகுறுவென உற்று நோக்கினாள் சஞ்சனா. மஞ்சள் முகம் முழுவதும் புன்னகை பூத்துக் கிடந்தது.

"அது சார்!..."

குமட்டிக் கொண்டு குபுக்கென்று வந்த சிரிப்பை வாரி முழுங்கிக் கொண்டிருந்தாள்.

நான் அவள் கூறப்போவதை நினைத்து எதிர்பார்த்துக் காத்திருக்க... அங்கிருந்த மொத்தக் கூட்டத்தில் ஒரு பகுதி எங்கள் முன் கூடிவிட்டது. அதில் ஒருத்தியாக

பரணிநிஷாவும் இருந்ததுதான் வேடிக்கை. அவளது வெளிறிய முகம் வெட்கத்தில் கோணிக் கிடந்தது. சஞ்சனாவைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு எரிச்சல் மேலிட்டது. கடுகடுத்து நின்றிருந்தாள்.

அதற்கு மேல் எனக்கும் பொறுமையில்லை.

"அட! சட்டுபுட்டுனு சொல்லு! மணியடிக்கப் போவுதுல்ல."

"இந்த பரணிநிஷா சார் மாங்காயை மங்கைன்னு எழுதிட்டு வருது சார்!"

"என்னது மாங்காயை!..."

"மங்கைன்னு எழுதுது சார்!"

அதற்கு மேல் என்னால் பொத்துக்கொண்டு வந்த சிரிப்பை அடக்கி வைக்க முடியவில்லை.

என்னை மறந்து வாய்விட்டு சிரித்தேன்.

"ம...ங்...கை...ன்னு சரியாத்தான் சார் நான் எழுதினேன்!"

அப்பாவியாக பரணிநிஷா கேட்டது இப்போது நினைத்தாலும் சிரிக்கத்தான் தோன்றுகிறது.

"ஏய்! சஞ்சனா! ம...ங்...கை...மங்கைன்னு பரணிநிஷாவும் சரியாத்தான பிழையில்லாம எழுதி இருக்குறா!"

குழந்தைகள் இனிது. அதைவிட அவர்கள் செய்யும் பிழைகள் அதனினும் இனிதல்லவா?

அந்த என் சப்பைக்கட்டை சஞ்சனா பொருட்படுத்தவில்லை.

"அட போங்க சார்! மாங்காயை மங்கைன்னு எழுதுனது சரியா?"

செல்லமாகக் கோவித்துக் கொண்டு சிரித்தவாறே வீட்டு மணியடித்ததும் தம் வகுப்பை நோக்கி ஓடிப்போனதை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். கூடவே பரணிநிஷாவும் ஓடிப் போயிருந்தாள்.

மாலை இறைவணக்கக் கூட்டம் முடிந்து வீடு நோக்கி வரும் வழி நெடுகிலும் இதை நினைத்து நானாக சிரித்துக்கொண்டே இருக்க அதுவரையிலும் மனத்தில் பெரும் பாரமாக அழுத்திக் கிடந்த அனைத்தும் காணாமல் போயிருந்தது.

சஞ்சனா என்னைச் மனச் சங்கடங்களிலிருந்து மீண்டும் உயிர்ப்பித்து விட்டாள். அதாவது நெருப்பாற்றையும் எளிதில் கடந்து செல்ல வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பதைக் கற்றுக் கொடுத்து விட்டிருந்தாள்.

வகுப்பு தொடரும்...

—

முனைவர். மணி கணேசன்

# வழக்கம் போல் உள்ளுக்குள்ளே...

செய்பணி
முடித்து
சோர்ந்து
தனித்த
உறக்கத்துக்கு
முன்னான
பொழுதுகளில்

இன்னைக்கு
முடிக்க வேண்டிய
பணிப்பட்டியலில்
பாதி கூட முடிக்கவில்லை

நாளைக்கு
செய்ய வேண்டிய
பணிக்கு
இன்று ஆரம்பிக்க
சொன்னவற்றை
ஆரம்பிக்கவே இல்லை

என
வழக்கம் போல்
குற்றச்சாட்டுகள்
மனதிடமிருந்தும்

நீ
சொன்னதை
செய்ய வருகின்ற
இடையூறுகள்
உனக்கு தெரியலே

எனக்கு
கிடைக்காத
ஒத்துழைப்பு
உனக்கு புரியலே



நீ சொல்லாதவற்றையும்
நான் செய்யவேண்டிய
கட்டாயம்
நீ அறியலே

என வழக்கமான
புத்தியின்
பதிலாய்

என
இருவருக்குமான
சண்டை
உள்ளுக்குள்ளே

-------

## கொஞ்சம் கூடவும் கொஞ்சம் குறைவுமாய்

கடந்த
பண்டிகை கால
உறவு மற்றும் நட்புகளுடன்
இணைந்திருந்த பொழுதுகளை

இப்போது நினைக்கையில்
மகிழ்ச்சி கிடைத்தாலும்

அந்த கணத்து உணர்வோடு
ஒப்பிடு செய்து
இன்னும் கொஞ்சம்
மகிழ்ந்திருக்கலாம்
என்றும்

தோல்வியுற்ற
இழந்த
அவமானப்பட்ட
வசை மொழி வாங்கிய
பொழுதுகளை

இப்போது நினைக்கையிலும்
வருத்தம் தான் என்றாலும்

அந்த நேரத்தோடு
ஒப்பிடு செய்து
இதுக்குப்போய்
இப்படி உடைந்து
போய் இருக்க வேண்டாம்
என்றும்
எண்ண ஓட்டங்கள்

காரணங்களாய்
இடைப்பட்ட ஆண்டுகளில்
ஏற்பட்ட மனப்பக்குவம்
மாறிய வாழ்க்கை பற்றிய பார்வை
கிடைத்த அனுபவம்

இது தான்
நாளை
இன்றையவை
பற்றி யோசிக்கும் போது
எண்ணங்கள் ஆகப் போகிறது

-------

## முன்னும் பின்னும்

நேர்மையாய்
மனசாட்சிபடி
உண்மையாய்
செயல்படுவேன்
என்ற நிலைப்பாடு

சாலையில்
அநாதையாய் கிடக்கும் பணம்
கவனக்குறைவால்
கூடுதலாய்
கொடுக்கப்பட்ட
பாக்கித்தொகை
என சலனம் ஏற்படும்
சந்தர்ப்பங்களிலும்
இருந்தால்
அர்த்தமுள்ளது...

-------

## உண்மையின் சாயலில்..

நான் பெருமைக்காக
சொல்லவில்லை
என்று ஆரம்பித்து
சுய புராணத்தோடு முடிப்பது

சட்டையில் எப்போதும்
பணம் வைத்து கொள்ளாமல்
பணம் எடுத்து வரவில்லை
இல்லையென்றால்
உதவி செய்திருப்பேன்
என்று கதை சொல்வது

என்று உண்மையின் சாயலில்
எத்தனை பொய்கள்?

-------

## மறுபுறம்

ஒரு வெற்றியில்
கிடைக்கும்
உள்ளத்து உவகை
பாராட்டு
அங்கீகாரம்
நம்பிக்கை
ஒருபுறம்

மறு புறத்தில்

தக்க வைத்து கொள்ள வேண்டிய
கட்டாயம்

கடின இலக்குகள்
கொள்ள வேண்டிய
தேவை

புதியவை
அறிய வேண்டிய
அவசியம்

எதிர்பார்ப்புகளை
நிறைவேற்ற வேண்டிய
கடமை

-------

## அவர்களுக்குப் பதில் இவர்கள்...

மனக்கலக்கத்திற்கும்
மனப்பதற்றத்துக்கும்
காரணமாய்

எதிர்பார்த்து நடக்க வேண்டும் என்ற
எதிர்பார்ப்பு

நாளையவை என்னவாகுமோ
என்பது பற்றிய பயம்

எடுத்து வைக்கின்ற
முயற்சி பற்றிய
சந்தேகம்

இவர்களுக்குப்பதில்

முடிவு பற்றிய
யோசனை இல்லா
கவனக்குவிப்புடன்
கூடிய செயல்கள்

விழித்திருக்கும்
எல்லா காலங்களில்
வெறுமே இல்லாமால்
ஏதாவது காரியத்தில்
ஈடுபாடு

தனித்திருக்கும்
காலங்களில்
சிந்தனையற்று
இருப்பது

கடினம் தான்
ஆனால் நிச்சயம்
சாத்தியம்

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை,
தொடர்பு இலக்கம்: **9994920236**

# கிராமத்து தெய்வங்கள்

மன்னார்குடி அருகேயுள்ள ஓர் அழகான பசுமையான கிராமம் பரவாக்கேட்டை, ஊருக்கு நடுவே மிக பழமையான கோவில் ஆகச வீரனார் ஆலயம்.

அந்த ஊரின் நடுவில் அமைந்துள்ள ஆகாச வீரனாரை குலதெய்வமாக கொண்டிருக்கும் ஒரு குடும்பத்தில் குழந்தைக்கு மெட்டை அடிக்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

அனைவரும் காலையில் எழுந்து பரபரப்பாக இயங்கிக்கொண்டிருக்க, வீட்டு பெண்கள் நீராடி  மனம் கமழும் பூக்கள் சூடி, வீட்டை தூய்மைப்படுத்தி, வண்ண கோலமிட்டு மாவிலை தோரணம் கட்டி சொந்தபந்தங்களை அழைத்து குலதெய்வத்திற்கு பொங்கல் வைத்து வீட்டில் வழிபாடு செய்து பின்பு கோவிலுக்கு சென்றனர்.

அங்கு பூசாரி வழிபாட்டிற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தார்.

தாய்மாமன் மடியில் உட்காரவைத்து முடி திருத்துபவர் குழந்தைக்கு மொட்டை அடித்தார்.

பின்னர் குழந்தையை குளிக்க வைத்து அதன் தலையில் திருநீறை பூசினர்.

அங்கிருந்த எல்லா தெய்வங்களுக்கும் சம்புராணி போடப்பட்டு கற்பூர தீபம் காண்பிக்கப்பட்டன.

அங்கிருக்கும் ஒருவருக்கு அருள் வந்துவிட பயபக்தியுடன் அனைவரும் அருள்வாக்கு கேட்டுக் கொண்டனர்.

சாமி மலையேறிய பின்னர் அனைவருக்கும் மாவிளக்கும் பாணக்கமும் பிரசாதமாக வழங்கப்பட்டது.

பிரிந்த சில உறவுகள் அங்கு ஒன்று சேர்ந்தனர். சேர்ந்திருந்த சில உறவுகள் கோவித்துக் கொண்டு சென்றன.

அங்கிருந்த அனைவரின் உணர்வுகளும் காணாமல் போயின அந்த பிஞ்சு குழந்தையின் சிரிப்பினில்.

பின்னர் அனைவரும் விடைபெற்று வீடு திரும்பும் பொழுது பூசாரிக்கு மீண்டும் அருள் வந்து இறங்கியது போல் வெளியூரிலுந்து வந்திருப்பவர்களை பார்த்து சொன்னார் “தை மாசம் குடுப்பதோட வந்து பொங்கல் வைங்க, குலசாமிக்கு விளக்கு போடுங்க” என்று சொல்லி அனுப்பினார்.

சாமி வருவது உண்மையோ இல்லையோ ஆனால் எல்லோரையும் மீண்டும் ஒன்றாக இணைக்க இதுபோன்ற கிராமத்து தெய்வங்கள் இருப்பது நல்லது தான்...

—

ரம்யா தங்கதுரை

# மழை

எங்கிருந்தோ
அனுப்பபட்ட தூதனாய்
ஊர்முழுக்க அனைவரையும்
சிலநேரக்கணங்களில்
அமைதியாக்குகிறான்

இறைத்து ஊற்றும்
வானத்திற்கீழ்
முளைக்கப்பட்ட
காளான்களாய் குடைகள்

ஒளிர்ந்த மின்பல்புகள்
ஓய்வெடுத்துக்கொள்கின்றன
சிறிதுநேரம்

படபடத்த சன்னல்கள்
இழுத்துப் பூட்டப்படுகின்றன
கொடியில் கட்டிய துணிகள்
வெட்டவெளியில்
நீராடுகின்றன

மின்னொளிர்
 நாணத்தில்ஒளிந்து கொள்ள
அரைகள் முழுதும்
இருள்கவ்விக் கொண்டன

இருளின் வருகையால்
குழந்தையின்
வீட்டுப்பாடங்கள்
புறக்கணிக்கப்படுகின்றன

விண்ணை முட்டிய
இடியொலி மண்ணில்
விழுந்து பூதாகரமாகின்றன
நிழலாய் நின்ற
ஆதிமரமொன்று சாலையில்
மரித்து கிடக்கின்றன

மழலையர்களை
கவ்விய பசியை
அம்மாவின் கதை
இழுத்துச்செல்கின்றன....
மின்னொளிர் பூக்குமா?
ஏக்கத்துடன் காத்திருக்கும்
விழிகளை சன்னமாய்
அழைக்கிறது நித்திரையொன்று...

தேடிப்பிடித்த
சிம்னிவிளக்குடன்
போராடிய அம்மா
இருளை தள்ளிவிடுகிறாள்
சற்றுதூரம்

கொசுக்களுடன்
கைதட்டி விளையாடிய
குழந்தைகள் ஒருவழியாய்
நுழைகின்றன
போர்வைக்குள்....

பசியை கதையில்
கட்டிய அம்மா
அவிழ்த்துவிடுகிறாள்...
சூடான தோசையை
ஆளுக்கொன்றாய் பரிமாற
நிரம்பிய வயிறோடுமழலையர்கள்
நித்திரைக்குள் நுழைய
இடியொடு வந்த மழையும்
வாழ்த்திச் செல்கிறது.

-----

## உறங்கும் அப்பா

உதிரும் மலர்கள்
கல்லறையில்கண்ணீர்த்துளி

இடம்பிடித்தது
சாதி மதம்
விண்ணப்பபடிவத்தில்

ஏழையின் வீட்டில்
இலவச இணைப்பு
பொத்தல் கூரை

அமைதி காக்கவும்
நூலகத்தில் கத்துகிறது
பாரதியின் குயில்பாட்டு

ஆறுகள் நீந்த
கற்றுக்கொண்டன
குதிக்கும் மீன்கள்

தென்றல் தீண்ட
காதல் வந்தது
அலைகளுக்கு

கோயில் உண்டியல்நிரம்பியது
நிரம்பாத.தட்டுகள்
பசியில் யாசகன்...

—

ஞா. முனிராஜ்

---

## உயர்ந்து செல்ல...

கண்ணிலே அன்பிருந்தால்
நீ கருணை கடலென்பர்,

பேச்சிலே பண்பிருந்தால்
பெருந்தலைவன் நீயென்பர்,

உழைப்பினில் ஓய்வில்லை என்றால்
உண்மையான தலைவனென்பர்,

பசித்தவர் வந்துவிட்டால் வழங்கிடும்
உணவே உன்னை
தாயென வணங்கி நிற்கும்

கல்விதனை வேண்டுவோர்க்கு
உதவிகள் செய்து வந்தால்
எங்கள் குரு நீதானென்பர்,

உலகினில் அமைதி வேண்டி அயராது
உழைத்து வந்தால்
உலகின் தலைவன் என்று போற்றியே
பாடி நிற்பர்,

அன்னை மேல் அன்பு கொண்டால்
உலகமே உனதென்பர்..

—

எம்.என்.பாஸ்கரன்,
ஓய்வு - கிராம நிர்வாக அலுவலர்,
மன்னார்குடி.

# உயிர்த்திரவம்...

கால்கள் இடற
அடுத்தஅடி எடுத்து
வைக்கக்கூட திராணியற்று
உழைத்து சதைகள்
கசங்கிப்போன தொழிலாளி
தேநீர் குடிக்க பெருமூச்சோடு
அமர்கிறார்
ஊதிக்குடிப்பதற்கும்
பொறுமையற்று
குவளையை லேசாக ஆட்டிவிட்டு
நாக்கில்
பாதிபட்டவாறு தொண்டைக்குள்
ஊற்றுகிறார் தேநீரை
ஆறிக்கிடந்த உயிர் மெல்ல
சூடேறத்தொடங்குகிறது ஒடிந்துபோன
தேகத்திற்குள்....

## கவர்ச்சியான நம்பிக்கை!

கூட்டம் அலைமோதும்
பிரபல ஜவுளிக்கடைக்கு
முன்னால் நின்றுகொண்டு
சிலுவையொத்த கம்பியில் ஆயத்த
ஆடைகளை தொங்கவிட்டு
ஜனத்திரளில் யாராவது வாங்கிவிட
மாட்டார்களா என
விற்றுவிடக்காத்திருக்கும்
வியாபாரியின் நம்பிக்கை
அவனின் ஆடைகளைவிட
அழகான வண்ணத்தில்
ஜொலித்துக்கிடக்கிறது..

—

நேசன் மகதி

---

# நிலவிற்கு நேரம்

மழலைகளின்
கன்னம் பிடித்து
கொஞ்சுகிறேன்
கீழ் விழுந்த
பூவிற்காக இரக்கம்
கொய்கிறேன்
நிலவிற்கு
இருபது நிமிடம்
செலவிடுகிறேன்
ரிங்டோன் DP
எல்லாம் ஹார்ட்டின்
மிதக்கின்றன
தனிமைக்கு ஏங்கி
பூமியின் ஓரம் தேடுகிறேன்
கைப்பேசித் திரைக்கு அவ்வப்பொழுது
முத்தமிடுகிறேன்
ஏனெனில் தற்சமயம்
காதல் கவிதைகள்
எழுதத் தொடங்கியிருக்கிறேன்.

—

ரகுநாத் வ,
மதுரை.

# துளிப்பாக்கள்

அவளிட்ட கோலம்
முத்தம் கொடுக்கிறது
தலைகீழாக விழும் பூக்கள்

நிலவை
மடித்து எடுத்துச் செல்கிறது
குழந்தை

நான் கடலை ரசிக்கிறேன்
நண்டு நிலத்தை ரசிக்கிறது
ஒரே கரையில்

இருளை விரட்டிய
திரியின் மேல்
இருள்

உயர வளரும் மரங்கள்
சுவைக்கட்டும்
வானம்

மேல்நோக்கி பார்க்கிறேன்
வான் தாளில் வரையப்பட்டிருக்கும்
இலைகளின் ஓவியம்

மரத்தின் இலைகளிடையே ஊடுருவிய
வெயில்
பிடித்துக் கொண்டது
செடியின் இலைகள்



—
சா. கா. பாரதி ராஜா,
செங்கல்பட்டு | 9944315732

1. வாழ்க்கையை மெனக்கெட்டு தந்திருக்கிறது காலம். எதிலும் மெனக்கெடாமல் விரிசலைத் தந்து, வாழாமல் தவிக்கிறோம் நாமும்.

2. வாலிபத்தை வசீகரிக்கும் காதலால், சில பெற்றோரின் வாழ்க்கை வலுவிழந்தே போகிறது.

3. வெவ்வேறு திசைகளில் வசிக்கும் வானுக்கும், பூமிக்கும் காற்று ஒன்றுதான் பாலம்.

4. சாலைகளைக் கடக்கவிருக்கும் எதிரெதிர் பயணிகளின் இலக்கும் வெவ்வேறு தான்.



—
வாழ்வியல் கவி, (சா. நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.

# தண்ணீர்

தண்ணீர் இல்லாமல்
போனால் கண்ணீரே
தண்ணீராக மாற்று நிலை
தோன்றும்....!

கண்களில் தண்ணீர்
வர வர சிறிது நேரத்தில்
வற்றி விடுவது போல
தண்ணீரையும்
நிலத்தில் தோண்ட தோண்ட
வற்றி விடுகிறது.......!

பெரியோர்களின் கூற்றுப்படி
சிக்கனம் தேவை இக்கனம்.....!

இல்லையென்றால்
தண்ணீர் இல்லாத கண்ணீராக
மாறி விடும்.....!

அனைத்து உயிர்களுக்கும்,
உயிருக்கு உன்னதம் அளிப்பது
தண்ணீர் (நீர்)......!

மரத்தை வளர்த்து காற்றை
சேகரிப்போம்...!
மண்ணை பாதுகாத்து நீர் வளத்தை
உருவாக்குவோம்......!
மாரி மும்மாரி
பொழியவில்லை......!

வற்றாத
நதிகளிலும்
நம் கண்ணீர் துளிகள்
கலந்து உப்பாகி
கிடைக்கிறதே......!

வருணப்பகவான்
பார்வையிலும்
வரவழைக்க
முடியவில்லை
இந்த கண்ணீர்
என்னும் தண்ணீரின்
மழையை
பொழி
பொழி
புனிதமாகட்டும்
இந்த
தரிசுக்காட்டு
நிலமும்......!

—

ச.சத்தியபானு



# மத்தாப்பூ நினைவுகள்

இரவு பகல் அறியாத வயதில்
இருள் சூழ்ந்த
விடியற்காலை
பொழுதொன்றில்

இமைகள் சுருக்கி விரிக்க
ஆழ்ந்த உறக்கம் களைக்க
மழைச்சாரல் மனதோடு நனைக்க
நட்சத்திரப் பூக்கள்
எங்கும் சிதற

மகிழ்ச்சியின் ஆரவாரம் பெருக
ஒளி வெள்ளத்தில் மூழ்கிய
அப்பாவின் அரவணைப்போடு
மத்தாப்பூ கம்பிகளை
கையிலேந்தி
கொண்டாடிய
சிறு வயதின்
முதல் தீபாவளி

நினைக்கும்போதெல்லாம்
சிதறிக் கொண்டிருக்கிற
மத்தாப்பூ நினைவுகளை
கையிலேந்தி
நினைவுக் கூறுகிறேன்
ஒவ்வொரு தீபாவளியன்றும்!

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம் | 6380704001



---

# சேமிப்பு

சேமிப்பை செய்துவந்தால் செவ்வனே
வாழ்ந்திடலாம்
சேகரிக்கும் பழக்கத்தால்
சுதந்திரமாய் இருந்திடலாம்

எதிர்கால வாழ்க்கையினை
எளிதாகக் கடந்திடலாம்
எதிர்பார்த்த எல்லாமே
இணங்கியே புரிந்திடலாம்

திடீர் செலவினத்தில்
தீர்வாகும் சேமிப்பு
சிரமமான நேரங்களில்
சிறப்பான சமாளிப்பு

எதிர்காலத் திட்டமிடல்
இலகுவாக்கும் சேமிப்பு
உன்கையில் பணமிருந்தால் ஓடிவிடும்
மனக்கசப்பு

தேவையின் தோதறிந்து
தேர்ந்திடுவாய் சிக்கனத்தில்
தேடிய தனமெலாம்
தீராமல் காத்திடுவாய்

செல்வோம் என்றுசொல்லி
செல்வமோடிவிடல் கூடும்
சென்றபின்னே வருந்திக்கொண்டு
சீரழிதல் கூடாது

வீண்செலவு வேண்டாம்
வெகுவுலோபம் கழிக
வேண்டியோர்க்கு உதவி
வினைப்பயனும் அடைக

புவிவாழ்வு பொறுமையுடன்
பேணிநிதம் காத்திடுக
பொழில்தேனி அதையொக்கும்
பெருஞ்சேமிப்பில் பலம்பெறுக

-----

## குறுங்கவிதைகள்

*1*
குண்டுவெடிப்பு
இறுக அணைத்துக் கொள்ளும் சிறுமி
புத்தகங்களை நெஞ்சோடு

*2*
விரிந்த பூ
விழப்பார்க்கும்
பனித்துளிகள்

*3*
மஞ்சள் மலர்
பார்வையில் படுகிறது
மங்கையின் கூந்தல்

*4*
முடிச்சிட்டது யாரோ?
மரணம்வரை இணைந்தே இருக்கும்
முளைத்த இருமரங்கள்

*5*
ஆவேச நடனம்
நொடிக்கு நொடி
பயணப்பாதையில் தண்ணீர்க்குழிகள்

*6*
மனிதரைக் காட்டிலும்
மிகவும் நம்பகமானது
பணம் எடுக்கும் கருவி

*7*
நெருக்கமான குடியிருப்பு
இடையே தேடிக்கொண்டிருக்கும்
ஓடுபாதையை மழைத்துளிகள்

—

*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர்,
இலங்கை.

# நீலமலை அணைக் "கட்டு"

நீர்தர மறுக்கும்கர் நாடகத்திற்கு
நல்ல தொருபாடம் புகட்ட
நீல மலையடி வாரத்திலே
கட்டுவோ மினிஅணை யொன்றை

பலவண்ண பூக்கள் மீது
பட்டுத் தெளித்துபாதை மாறாது
பாய்ந் தோடிவரும் நீருக்காய்
கட்டுவோ மினிஅணை
யொன்றை

மனிதக் குலத்தின்நோய்
தீர்க்கும்
மூலிகை மணங் கமழும்
மருத்துவ குணமிக்க
நீருக்காய்
கட்டுவோ மினிஅணை யொன்றை

தேக்கும் பாக்கும் மிகுந்த
தென்றல் வீசும்சோலை வனத்தில்
தெவிட்டாது ஓடிவரும்
நீருக்காய்
கட்டுவோ மினிஅணை யொன்றை

பொங்கு நுரை அருவிகளை
பொறுமை யுடன்அழைத்து வரும்
பொன் னிலும்மேலான
நீருக்காய்
கட்டுவோ மினிஅணை யொன்றை

குயில் பாடும்இன் னிசையில்
குறுகின ஓடை யெல்லாம்
குன்றா மல்ஓடிவரும்
நீருக்காய்
கட்டுவோ மினிஅணை
யொன்றை

காவிரி காவிரி யென
கத்தி கத்திஓய்ந் திடாமல்
கட்டுவோ மினிஅணை
யொன்றை
நீல மலையடி வாரத்திலே


—

கவிஞர்
மு. ஜெரோஷா
திருப்பூர்



மா. நிரல்யா,
சிங்கப்பூர்.

# நூல் மதிப்புரை




*நூலின் பெயர்: அகமேந்தி (குறுங்கவிதைகள்)*
*நூலாசிரியர்: ச. இராஜ்குமார்*
*நூல் வெளியீடு: உலகத் தமிழன் பதிப்பகம், சென்னை 11.*

*பக்கங்கள்: 104*
*விலை: ரூ.150/-*
*நூல் வாங்க: 8867933021*

*'காட்டுவாசி ஒருவன் கொட்டிய பாறையில் கவிதை தோன்றியிருக்க வேண்டும்' என்பார் எமர்சன். 'கவிதை மந்திர மொழிகளிலும் சடங்குச் சொற்களிலும் வாய்மொழிப் பாடல்களாகத் தோற்றம் பெற்றிருக்க வேண்டும்' என்கிறது வாழ்வியல் களஞ்சியம்.கவிதை என்பது உணர்ச்சிளைப் பிழிந்து தமிழோடு பிசைந்து செய்யப்பட்ட ஓர் இன்பக்கவளம் என்றால் யாரும் மறுப்பதற்கில்லை. உணர்ச்சி, கற்பனை, வாழ்வியல் கருத்துக்களை வெளிப்படுத்தவும் தூண்டவும் கவிதை உதவுகின்றது.தமிழ் மொழியின் செழுமையையும் அழகையும் சிறந்த இலக்கண நடை கொண்ட தமிழ் மரபுக்கவிதைகளில் நாம் காணலாம். ஆனால் அவ்வாறான வரையறையற்ற புதுக்கவிதை வடிவங்களில் கவிதையின் இனிமையையும் எளிமையையும் உணர்ச்சி ததும்பும் வெளிப்படையையும் நாம் காணக்கூடியதாக இருப்பது அதன் சிறப்பம்சமாகும். எம் தாய்மொழியாம் தமிழை வளர்க்கும் அனைத்துக் கவிஞர்களும், அனைத்து இலக்கியவான்களும் நிச்சயம் போற்றப்பட வேண்டியவர்களே.*

*அகமேந்தி குறுங்கவிதைகள் நூலானது சென்னை, உலகத் தமிழன் பதிப்பகம் வெளியீட்டில் பிரசவமாகியிருக்கிறது. மு.முருகேஷ் (முதுநிலை உதவி ஆசிரியர், இந்து தமிழ் திசை நாளிதழ்) அவர்களின் அருமையான முன்னுரையோடு, கவிஞர் பாண்டிச்சேரி கருப்பசாமி அவர்களின் அன்பான அணிந்துரையோடு இன்னும் பல இலக்கிய மேதைகளின் வாழ்த்துரைகளோடு அழகிய குறுங்கவிதைகள் தாங்கி மலர்ந்து நிற்கிறது அகமேந்தி. குறுங்கவிதைகளால் உங்கள் அகங்களை ஏந்திக் கொள்கிறது என்றால் அது மிகை இல்லை.*

*இயற்கையை, பறவைகளை, வானத்தை, சிற்றுயிர்களை மற்றும் மகிழ்ச்சி, காதல், நட்பு, வலி, துரோகம்,உறவு, பிரிவு போன்ற பல்வேறு வாழ்வியலின் கூறுகளையும் பாடுபொருளாகக் கொண்டு தன் சின்னஞ்சிறிய கவிதைகளால் அனைவரையும் கவர்ந்து விடுகிறார் கவிஞர். சிறிய கவிதைகளால் பாரிய உண்மைகளை, பாரிய கருத்துக்களை நமக்கு*

உணர்த்துகிறார். மெல்லிய உணர்வுகளின் கலவையாக அகமேந்தி உங்கள் அகங்களை நனைப்பதை நீங்கள் நூலை வாசிக்கும்போது உணரக்கூடியதாக இருக்கும். யாம் பெற்ற இன்பம் பருக உங்களையும் அன்புடன் அழைக்கிறேன்.

நூலாசிரியர் கவிஞர் ச.இராஜ்குமார் அவர்களின் கவிதைகளில் கருணையும் இரக்கமும் ஏக்கமும் குழந்தைத்தனமுமே அதிகமாக காணப்படுகின்றன. ஹைக்கூ கவிதைகள் எழுதுவதிலும் கவிஞர் திறமை வாய்ந்தவர் என்பதை இவ்விடத்தில் கூற விளைகிறேன்.அகமேந்தியில் ஹைக்கூ கவிதைகள் பல துளிர்த்து வேர்விட்டிருப்பது நூலுக்கு சுவை சேர்க்கும் ஒரு அம்சமாகும்.

"பறத்தலுக்கு வானம் கைவசத்தில் இருக்கு
திரும்பி வந்தால்
கூடு கட்டத்தான்
மரங்களில்லை பறவைகளுக்கு!"

இது கவிஞரின் முதலாவது கவிதை.முதல் கவிதையிலேயே பறவைகளுக்காக பரிதவிக்கிறார் கவிஞர். எத்தனையோ உள்ளர்த்தங்களை கவிதை மூலம் உணர்த்தி விடுவது அவரது கவிதைகளின் சொற்சேர்க்கைகளின் சிறப்பு என்றே கூறலாம். மனிதனின் செயற்பாடுகள் காரணமாக, நகரமயமாக்கல் காரணமாக மரங்கள் அருகி வருவதைக் கண்டு அழும் கவிஞர் அதேநேரம் உலக மனிதர்களிடம் மரங்களைப் போன்று வானத்தையும் உங்களால் சூறையாட முடியுமா? என்ற வினாவையும் தொடுத்துச் செல்கிறார்.

பூமியில் இருக்கும் நாம் தான் வானில் இருக்கும் நட்சத்திரத்தை பார்க்கிறோம். பூமியில் இருக்கும் நாம் தான் வானில் பறக்கும் பறவைகளைப் பார்க்கிறோம் ஆனால் கவிஞர் சொல்ல வருவதைப் பாருங்கள்.

“நிலவின் பார்வையில்
ஓராயிரம் நட்சத்திரங்கள் பூமியில் மின் விளக்குகள்”

ஆஹா... என்ன ஒரு கற்பனை.
பூமியின் நட்சத்திரங்களை நிலவு பார்த்துக் கொண்டிருக்கிறதாம்!
நட்சத்திரக் கண்கள் பூமியின் அழகியலைக் கண் சிமிட்டாது பார்த்துக் கொண்டிருக்குமோ?

'யாரோ ஒருவரிடம்
நம்மைத் தேடுவதில் ஆரம்பமாகிறது

நிம்மதியின்மை

வாழ்வின் தத்துவங்களையும் எதார்த்தங்களையும் நான்கு வரிக்குள் உள்ளடக்குவதில் கவிஞர் வல்லவர் என்று நினைக்கிறேன். காலங்காலமாக மனிதவாழ்க்கை என்பது எதிர்பார்ப்பிலேயே கழிந்து விடுகிறது. எல்லா உறவுகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து அன்பை, காதலை, கருணையை, தேவையை ஆளுக்காள் எதிர்பார்த்த வண்ணமே வாழ்கின்றன. மனித மனம் என்பது எத்தனையோ கரங்கள் ஆதரித்தாலும் அன்பெனும் ஒரே ஒரு சுட்டு விரலுக்கே அடிபணியக்கூடியது. அவ்வாறான அன்பைத் தவறான நபரிடம் நாம் தேடும்போது அந்தப் புள்ளியில் இருந்து ஆரம்பமாகிறது நிம்மதியின்மை என்பதை இக்குறுங்கவிதை உணர்த்திச்செல்வதைக் காணலாம்.

“விடைபெற்றபின்
குடையொன்றைத்
தந்து செல்கிறாய்
முழுதாய் நனைந்து கொண்டிருக்கிறேன்
கண்ணீரில்”

உறவு என்றால் பிரிவு இருக்கும்
காதல் என்றால் கண்ணீர் இருக்கும். இதயங்கள் இரண்டும் இணைந்த பின் இடைவெளிகள் இல்லை. இந்தக் கவிதையில் ஆத்மார்த்தமான காதலைக் கவிஞர் வெளிப்படுத்தும் விதம் ஆச்சரியத்தை நமக்குள் விசிறிச் செல்வதைப் பார்க்க முடிகிறது. முழுதும் கண்ணீரால் நனைந்த பிறகு பிரிவின் பொழுதில் பரிசாகத் தந்த குடை அவனுக்கு உதவவே இல்லை என்பதை நாசுக்காக சொல்வது மிகவும் அழகாக இருக்கிறது.

இளமையிலோ முதுமையிலோ வாழ்வின் எல்லாக் கணங்களிலும் யாருமே தமது உள்ளங்களில் தங்கிய அன்பின் அழகிய நினைவுகளை உதிர்த்து மறந்து விடுவதில்லை.அது எப்போதும் உயிர்த்திருக்கும் ஜீவிதமுடையது. வாழ்வின் எந்த ஒரு கட்டத்திலும் எந்த ஓர் இடத்திலும் இடங்களைக் கடந்து செல்லும் போதும் தனிமையிலும் கூட்டத்திலும் பயணத்திலும் அழகிய நினைவுகள் மனதில் ஊசலாடிக் கொண்டே இருக்கும்.

அதுவும் ஒரு அமைதியான பொழுது அமைந்துவிட்டால் ஆழ்மனதின் ஓரங்களில் படிந்த அழகிய நேச நினைவுகள் துளிர்விட்டுக் கிளை விட்டு விருட்சமாகி விடும்தானே?

இந்தக்கவிதையைப் படிக்கும்போது கடைசி வரியில்
கனமான ஒரு உட்பொருளை கவிஞர் சொல்வது சிறப்பாக அமைந்திருக்கிறது.

*அமைதி ஒரு முழு நீள சுகம்...*
*அமைதி ஓர் உன்னதமான உண்மையான உணர்வு...*
*அமைதி ஒரு சொர்க்கம்...*
*அமைதியை தூரத்தில் துளைப் போட்டு இசைத்துக் கொண்டிருக்கும் வண்டுகளின் ராகம்...*
*அமைதி நம் முழு மனதின் சாந்தம்...*
*அமைதி யார் யார் மீதோ வைத்திருக்கும் நினைவுகள்..!!!*

இப்படி மெல்லிய உணர்வுகளால் மிருதுவாகத் தாலாட்டும், மனதை லயிக்கச் செய்யும் கவிதைகள் இந்த நூலில் ஏராளம் காணப்படுகின்றன.

"கோடிக்கால்களில்
நடக்கும்
மழைக்கும்
நொடிப்பொழுது கூட நிலைப்பதில்லை சுவடுகள்...!"

அழகியலோடு சேர்ந்து வாழ்வின் நிலையாமையை எடுத்து இயம்பும் சில்லிடும் இயற்கையின் கவிதையை நீங்களும் ரசித்துப் பாருங்களேன். இந்த ருசியான கலவையில் ஒரு ஜென் தத்துவத்தைக் கவிஞர் உங்களுக்காக விட்டுச் செல்கிறார்.

இப்படி கவிஞரின் ஒவ்வொரு கவிதைக்குள்ளும் சுவை மிகுந்த, வலி மிக்க, தத்துவங்கள் கூறுகின்ற, நேசத்தைப் பாடுகின்ற, காதலைத் தரிசிக்கின்ற, துரோகத்தை விளாசுகின்ற அனேக கவிதைகள் அடங்கி இருக்கின்றன. அருமையான கருத்துக்கள் தாங்கிய குறும்பாக்களை ஒன்றாக்கி ஒரு கதம்பமாக உங்கள் முன் நீட்டியிருக்கிறார்.

நான் ரசித்த மேலும் சில கவிதைகள்...

"கவிதை ஒன்று கரை ஒதுங்கியது
அவள் கண்களின் ஓரம் கண்ணீர்த் துளியாய்...!"

காதலியின் கண்ணீர்த் துளியைக்கூட விட்டு வைக்கவில்லை கவிஞர். அதைக் கவிதையாக்கிய விதம் வியப்பாக இருக்கிறது அல்லவா?

"மற்றவர்களின் உணர்வுகளையும்
உணர்ச்சிகளையும்
புரிந்து கொள்ள முடியாத
நான்

ஒரு மிருகம் என்று
நீங்கள் நினைத்தால் என்னுடைய உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் புரிந்து கொள்ள முடியாத நீங்கள் யார்?"

நிறைகளை விட்டுவிட்டு
குறை கூறித்தெரியும் அனைவருக்கும் மேற்கண்ட கவிதை கனமான சாட்டையடி.
நல்லதோர் கேள்வி... அனைவருக்கும் புத்திமதி செல்லக்கூடிய கவிதை சிறப்பு.

"தேவதைகளைத்
தேடத்தேவையில்லை.. மகள்களைப் பெற்றாலே
போதும்...!"

ஆஹா... அற்புதமான கவிதை. பெண் பிள்ளைகள் மண்ணுலகின் தேவதைகள். அவர்களைப் பெற்றாலே போதும் நீ தேவதைகளை தேடித்திரியத் தேவையில்லை. நீ நலவுகளை தேடியலையத் தேவையில்லை. அவளே எல்லாமாக உனக்கு இருப்பாள். நான் வியந்த கவிதைகளில் இதுவும் ஒன்று.

அழகும் எளிமையும் ததும்பி வழியும் வகையில் கவிதை நூலை ரசித்து ரசித்து செதுக்கியிருக்கிறார் கவிஞர் ச.இராஜ்குமார். இதயத்திற்கு இனிமையும் தமிழுக்கு அழகும் சேர்த்து வாசகர் நெஞ்செனும் ஆசனத்தில் வசதியாக உட்கார்ந்து விடுகிறது இக்கவிதை நூல்...

அகமேந்தி இருந்த "அகமேந்தி"யைத் தமிழ் கூறும் நல்லுலகுக்கு அச்சில் வார்த்துப் பரிசளித்த கவிஞரை மனமுவந்து வாழ்த்துவதோடு இன்னும் அவர் பல நூல் பிரசவங்களை எதிர்காலத்தில் நமக்குத் தர வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

நன்றி.

*Dr*. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்,
இலங்கை.

## உனையன்றி யார் அறிவார்?

உன் முதுகின்
அழுக்கை

கண் அறியா
நகக்
குற்றத்தை

நச்சு மரமாய்
வளர்ந்து விட்ட
வெறுப்பை

விவஸ்தைக் கெட்ட
ஆசைகளை

கொழுந்து விட்டெரியும்
மோகத் தீயை

ஆழ் மனதின்
வக்கிரங்களை

நிறைவேறாத
ஏக்கங்களை

நிறைவேற்றக்
கூடாத ஆசைகளை

முகமூடிகளுக்கு
நடுவே தொலைந்து
போன முகத்தை

சிரிப்புத் தோல்
போர்த்திய
அழுகையை

உறையிட்டு மூடிய
உள்ளக் குமுறல்களை

உனையன்றி
யார் அறிவார்

உனக்குள் இருக்கும்
உன்னை
உன்னை யன்றி
யார் அறிவார்?

—



அ. ஈடித் ரேனா,
கிராம நிர்வாக அலுவலர்,
புதுக்கோட்டை - 622003

---

# பூமித்தாயிக்கு விருந்து

கதிரவனின் கடுங்கோபம்
கதிர்வீச்சில் கனத்த வெப்பம்
கிழிந்த சாலையில்
வானத்து வரைவுகளாய்
பூமித்தாயின் மேனியில்
பூத்தது வெடிப்பு
பசுமை காணா மேலோடு
பதைக்கும் தனல்கீழோடு
உயிர்களின் கூக்குரல்
உரைத்து அழைக்க
பூமித்தாய் பொறுமையில்

புரிந்த தவ வலிமையில்
துளித் துளியாய் மௌனம்கரைந்த்து
தூது சென்றது வளியின் அன்பு
மேகக்கூட்டம் கவரி வீச
மழைமாலை பூமித்தாயிக்கு
வாழ்த்து சொல்ல பூத்தது பூக்கள்
சரிந்த சருகுகள் பாய்விரிக்க
தென்னங்கீற்று சந்தனம் பூச
புல்லின் வரிசை புத்தாடை பூன
வானவில் தோரணம் கட்ட
மேகக்கூட்டம் மெல்லிசை பாட
மேளச் சத்தம் இடையில் தெறிக்க
மூங்கில் காற்று மங்கலம் முழங்க
மின்னல் தேவதை அட்சதை தூவ
தூறும் சாரல் பன்னீர் தெளிக்க
பூவும் பிஞ்சும் சீர் பரப்ப
பழுத்த பழங்கள் பந்தி விரிக்க
செம்மண் நீரோ ஆலம் கரைக்க
காட்டினங்கள் கையொலி எழுப்ப
மகிழ்வில் மனிதர் மகிழ்ந்து ஆட
பூமித்தாயிக்கு விருந்தோ விருந்து.
இயற்கையை க் காக்க இயன்றதைச்
இன்றே செய் இப்போதே செய்

—

**விண்மீன்,**
சென்னை.

---

# நகர்ந்த நாட்கள்..!

இதோ,
வருடம் ஒன்றாகிவிட்டது...,
உன் கரங்களில் என் நம்பிக்கைகளை
கோர்வையாய் கோர்த்து..!
எப்போதும் போல் தான் நாட்கள்
நகர்ந்து கொண்டிருக்கின்றன..,
உன் அன்பின் தொடுதலை
உணர்ந்தபடி..!

என் புலரும் காலைபொழுதுகளில்,
மிகையற்று மிளிரும் உன் புன்னகைகளை
தவறியேனும் சேர்த்துவைக்காமல்
விட்டதில்லை..!

ஏதோவொரு
புதுவுலகில் பிரவேசிப்பதை உணராமல்
இல்லை நானும் !!!

ஒரே பிறவியில் இரு வேறு ஜனனங்களை
உணர்ந்து நகரும் என் நாட்கள் மட்டுமே
அறிந்திருக்கும் என்னவனே உன்னை!

இப்போதெல்லாம் எழுதுவதை
முற்றிலும் குறைத்துக் கொண்டேன்..,
என் அத்துணை உணர்வுகளும் உன்னில்
சிறைபட்டுப் போக..!

—

**திருமதி. சரண்யா ரவி,**
கோவை.

# புதிய வானம் புதிய பூமி...

விலையேறிப் போனதிங்கே
பொருட்கள் சேவைகள்.
மலிவாகிப் போனதிங்கே
மனித உயிர்கள்.

நிகழ்கின்றது தினமும்
கோரக் கொலைகள்
நிகழ்காலமோ மனதில்
தரும் பிழைகள்

பஞ்சமாபாதங்கள் எங்கும்
தலைவிரித்தாட
நெஞ்சமோ ரணங்களால்
தினம் அஞ்சி வாட

செவியேறும் சேதிகளில்
சேர்ந்தெழும் அச்சம்
புவி மேலே தொலைவாகும்
புனிதத்தின் எச்சம்

உள்ளத்தில் குடியேறியது
அரக்கத்தனம்
இல்லாமல் போனதிங்கே
இரக்க குணம்

இயந்திரமாய்
மாறி விட்ட மனிதன்
இழந்து விட்டான்
இதயத்தின் ஈரம்

இத்தனைக் குழப்பங்கள்
ஏனோ மானிடா
சிந்தனையைக் கொஞ்சம்
சீர்தூக்கிப் பாரடா..

கறைபடிந்த பொழுதுகளை
கலைத்து விடுவாயே
குறைகளைத் தீயிட்டு
எரித்து விடுவாயே

இத்தனை நாள் தீமைகள்
இன்றோடு அழியட்டும்
இனியொரு பூந்தோட்டம்
உன்னில் முளைக்கட்டும்

ஒவ்வொருவர் வாழ்விலும்
தேவை சீர்திருத்தம்
இதுதானே ஆரோக்கியமான
உலகுக்கு முன்னாயத்தம்

தவறான பாதையினை
மாற்றுதலே சிறப்பு
சரியான தீர்மானம்
வெற்றியின் திறப்பு

மற்றோரின் மனத்தினை
உணர்ந்தாலே நீயும்
சுற்றியிருக்கும் துன்பங்கள்
தானாக ஓயும்

எல்லோரும் நலம் வாழ
பிரார்த்தித்திருப்போம்
நல்லதொரு எதிர்காலம்
வரும் தலைமுறைக் கமைப்போம்

—

மக்கொனையூராள்

# சோதனைகளை சாதனையாக்கு...



உலகத்தில் வெற்றி பெற்றவர்கள், வெற்றியை தக்க வைத்துக்கொண்டவர்கள், வீழ்ந்து மீண்டும் எழுந்து வெற்றி பெற்றவர்கள் பெரும்பாலும் தனக்கு நேர்ந்த சோதனைகளை சாதனையாக்கியவர்களே.

"வீழ்வது தவறு அல்ல வீழ்ந்தே கிடப்பதுதான் தவறு" என்ற எண்ணம் எவருக்கு வருகிறதோ, அவர் மீண்டும் எழுந்து வந்து வெற்றி பெறுகிறார்.

சோதனைகள் வரும் போது அதை நினைத்து துவண்டு போய் செயல் பட முடியாமல் மூலையில் முடங்கி போவது ஒரு வகை. சோதனைகளை மறக்க, அதன் அவமானங்களை துடைத்தெறிய கோபம் கொண்டு போராடி வெற்றி பெறுவது இன்னொரு வகை. இந்த இரண்டாம் வகை மனிதர்களையே உலகம் என்றும் நினைவில் கொள்ளும்.

அதற்கு மிகச் சிறந்த நடப்பு உதாரணம் தற்போது இந்திய ஒன்றியத்தில் நடக்கும் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில், உலக கோப்பை நாயகனாக மிளிரும் இந்திய வேகப்பந்து வீச்சாளர் முகம்மது சமி ஆவார்.

வாழ்க்கையில் ஒருவனுக்கு எவ்வளவு சோதனைகள் வந்தாலும் தன் கடின உழைப்பால் மீண்டும் சாதனை படைக்க முடியும் என்பதற்கு முகமது சமி ஒரு பெரிய நிகழ்கால உதாரணமாகும். தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் தொடந்து சோதனைகளை சந்தித்த முகமது சமி, மீண்டு எழுந்து உலக கோப்பையில் நாயகனாக மாறியது இன்று உலகத்தையே திரும்பி பார்க்க வைத்துள்ளது.

இந்திய அணியின் நம்பர் ஒன் வேகப் பந்துவீச்சாளராக திகழ்ந்த சமி திடீரென்று தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைகளால் கிரிக்கெட் வாழ்க்கையை முற்றிலும் இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டார்.

தன் மனைவியின் விவாகரத்து,குழந்தையை அவரிடம் இருந்து பிரித்தது, தன் தந்தையின் மரணம் என தொடர்ந்து அடி மேல் அடி விழ, நிலை குலைந்து போன சமி கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறப் போகிறேன் என கூறியவுடன் ரவி சாஸ்திரி சமியிடம் சொன்னார் "உன் வாழ்க்கையில் நீ எவ்வளவு துன்பங்களை சந்தித்தாலும் வாழ்க்கையின் மீது கோபமாக இருந்தாலும், அதை அனைத்தையும் உடற்பயிற்சி செய்து கிரிக்கெட்டில் அந்த கோபத்தை காட்டு" அதனை வேத வாக்காக எடுத்துக் கொண்டு முகம்மது சமி அந்த கோபத்தை கிரிக்கெட்டில் காட்டத் தொடங்கினார்.

உடல் தகுதி இல்லாததால் பல போட்டிகளில் சமி வெளியேற்றப்பட்டார். நடப்பாண்டில் சிறப்பாக பந்து வீசியும் உலகக்கோப்பை தொடரில் சமிக்கு முதலில் வாய்ப்பு கிடைக்கவில்லை. கர்திக் பாண்டியா காயத்தால் வெளியேறியதை அடுத்து வேறு வழியின்றி சமியை ரோகித் சர்மா அணிக்குள் கொண்டு வந்தார்.

ஆனால் தான் அணியில் இருந்து நீக்கப்பட்டது தவறு என்பதை உணர்த்தும் வகையில், இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். இது மட்டுமல்லாமல் உலகக்கோப்பை வரலாற்றில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய வீரர் என்ற பெருமையும் தற்போது சமி பெற்றிருக்கிறார்.

நம் வாழ்க்கையில் எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் நமக்கு பிடித்த செயலை தொடர்ந்து வெறியுடன் செய்தால் நிச்சயம் வேதனைகள் சாதனைகள் ஆகும்.

- முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்.

---

# நினைவுகள்

ஒரு ரூபாய்க்காக
அப்பாவிடம் கெஞ்சிய நான்

நூறு ரூபாய் சாக்லெட்டை
மகனுக்கு கேட்டவுடன் வாங்கித்
தருகிறேன்,
சைக்கிள் வாடகைக்கு எடுத்து
ஓட்டிப் பழக காசில்லாமல்
தவித்த நான்

மகளுக்கு லட்ச ரூபாய் ஸ்கூட்டர்
வாங்கித் தருகிறேன்,
மழையில் ஒழுகும் குடிசையில் வசித்த
நான்

ஆகாயத்தை ரசிக்க
ஆடம்பரமான மாளிகையைக் கட்டி
மனைவிக்கு பரிசளிக்கிறேன்,
கால ஓட்டத்தில் எல்லாமே
மாறிப்போனது...

ஏதோ ஒரு ஓட்டைக் குடிசையோ
பழைய சைக்கிளோ
மிட்டாய் கடையோ கடக்கும் போது
திரும்பி பார்ப்பது
தவிர்க்க முடியாத ஒன்றாகிறது...

என் கண்களுக்கு!

—



மு. முபாரக்.
திருச்சி.

# வழி தப்பட்டும் ஆடு (சிறுகதை)

*எழுந்த வேகத்துக்கு காதோடு விழுந்தது ஓர் அறை.*

*நியாயமாக பார்த்தால் 13 நாட்களுக்கு காது கேட்காமல் இருக்க வேண்டும். அப்படி இழுத்து விட்ட செவுனி சிவக்கும் அறை. காதுக்குள் கொய்ங் கேட்க ஆரம்பித்த அடுத்த நொடியில்... பட்டாசைக் கொளுத்தி போட்டது போல... வார்த்தை வெடிகள்.. வாக்கியத்தில் பற்றிக் கொண்டு படபடத்தது.*

*"நானும் பாக்கறேன்... சும்மா நொய் நொய்ன்னு கத்திகிட்டு... பெரிய ஆங்கில நரிங்க... ஊஊஊ ஊஊஊ... ன்னு ஆங்கில இசையிலேயே தான் பாடுவாங்க... பாட்டாடா இது.... சகிக்கல... தாங்க முடியல....வாழ்க்கை முழுக்க பொறுத்துகிட்டது போதாதா... செத்தப்பறமும் பொறுத்துக்கனுமா... ஆழ்ந்த அமைதி வேண்டி தான்.. ரெண்டு நாளா யோசிக்கறேன்... சுத்தி உக்காந்துகிட்டு... ஊளை விட்டுக்கிட்டே இருந்தா எப்படி...?*

*கேட்டா சாமிக்கு கைத்தடி... சாமிக்கு இடைத்தரகர்... இல்ல....! ஊழியம் பண்றங்கற பேர்ல பண்ற கண்றாவியெல்லாம் தாங்க முடியல.*

*நீ இந்த ஊருக்கு வரும் போது எப்டி வந்த. சொல்லு.. சொல்லுடா.. வரும் போது எப்டி வந்த.. நடந்து வந்த. இப்போ மூணு மாடில வீடு.. ரெண்டு கார் ரெண்டு பைக்... பிள்ளைங்கள..... இருக்கறதுலயே பெரிய பள்ளிக்கூடத்துல படிக்க வைக்கற....! எப்படி இதெல்லாம். கேட்டா சாமி உயர்த்துச்சுன்னு கதை விடுவ...... ஏன் அதே சாமி எங்களை உயர்தலை... நாங்கென்ன தினமும் கொலை பண்ணிட்டா இருக்கோம்..."*

*கூட்டம் வெலவெலத்தது. சுற்றி அமர்ந்து ஊழியத்துக் கொண்டிருந்தவர்களெல்லாம்... நடுநடுங்கி ஒதுங்கி பேயைக் கண்டது போல பார்த்துக் கொண்டிருந்தார்கள்.*

*"கேட்டா விசுவாசம் இல்ல.. வேதாளம் இல்லன்னு தல படத்து பேரா சொல்லுவா..... இல்லயா...?*

*"முட்டி வலிக்கு... சாமி ரத்தம் பூசி விட்டல்ல....ஏன் கேன்சருக்கு பூசி விடல... பூசி விட்டு சரி பண்ணிருக்க வேண்டியது தான...! சாமி டிவிடிய கேன்சர் வந்த இடத்துல வெச்ச. ஆனா சரி ஆகலயே... சாமியாடி. எதெல்லாம் அதுவா சரி ஆகிடுமோ அதுக்கெல்லாம் சாமி எண்ணையை பூசறது... எதெல்லாம் கை மீறுதோ அப்போ ஆஸ்பத்திரிக்கு போன்னு*

சொல்லி கழட்டி விட்றது... நல்ல இருக்குடா உங்க சாமி தத்துவம்.

என் கிட்ட உக்காந்து என் புள்ளைங்கள கூட பக்க பாக்க விடாம.. சுத்தி உக்காந்துகிட்டு காலையிலருந்து பரலோக ராஜ்ஜியம்.. பாவுபாஜி ராம ராஜ்யம்ன்னு மாத்தி மாத்தி பேசிட்டே இருக்கறது சலிப்பா இருக்குடா முட்டாள்களே. ஈயே மொய்க்க ஆரம்பிச்சிட்டேன்டா. ரெண்டு நாள் ஆச்சு நான் செத்து. கேன்சர் பாடி. தாங்குமா. சீக்கிரமா காடு சேக்கணும்னு புரியலயா. வாழும் போது தான்... ஆயிரத்தெட்டு கட்டுப்பாடு... கட்டளை... தத்துவம்... சாமி கண்ண குத்திடும்னு பயம்...ஒரு ஞாயிற்றுக் கிழமை கூட நான் ஓய்வெடுத்து இல்லடா. காலைல 7 மணிக்கு வந்து சாமிகிட்ட உக்காந்தா... 2 மணி வரை.. தூங்கி வழிஞ்சு.. நீ கத்தறது....உளர்றது.... பாடறதுனு அதே விடயத்தை திரும்ப திரும்ப கேட்டு கேட்டு மழுங்கி போனது தான் மிச்சம். கூட்டத்தோடு கூட்டமா சேர்ந்து வழி தப்ப முடியாத ஆடாய் உக்காந்துட்டு இருந்ததெல்லாம் போதும். இப்போ எனக்கு விடுதலை. நிம்மதியா அமைதியா ஓய்வு எடுக்கணும்..."

"கேன்சர்ல கூட காசு இருக்கறவன் கேன்சர் குணமாகுது.. காசில்லாதவன் கேன்சர் கொன்னு போடுது..." முனங்கி கொண்டே திரும்பி கூட்டத்தை கண்கள் சுழற்ற கண்டது.

அடுத்த விழுந்த அடி... ஒருத்தியை அலற விட்டது.

"யார் நீ.. என் தங்கச்சியா.. 10 வருசமா செத்து போயிருந்தியா....? இப்போ வந்து லொக்கா லொக்கானு ஊளை விட்டுட்டு இருக்க. போன மாசம் முழுக்க மருத்துவமனையில படுத்த படுக்கையா கிடந்தேன்ல. இங்க தான இருக்கு உன் வீடு. ஏன் வந்து பாக்கல. நீ நல்லா தான இருக்க.. நான் சிரமப்பட்டுட்டு தான இருக்கேன்... ஒரு புடவை வாங்கி குடுத்திருப்பியா...? கேட்டா நீ பெரிய விசுவாசி. இந்தா... இந்த சாமி இடைத்தரகருக்கு தூக்கி தூக்கி குடுப்பீங்க. கூட பொறந்த அக்காவுக்கு ஒரு நூறு ரூபாய் தர மாட்டீங்க. ம்ம்ம்... என் புருசன் கடைசி காலத்துக்கு சேர்த்து வெச்ச எல்லா காசையும் குடுத்து இத்தன நாள் என் உயிர காப்பாத்தினாரு. இன்னும் என் பொண்ணுக்கு கல்யாணம் கூட ஆகல. இனி என்ன பண்ண போறாங்கன்னு தெரியல. எது பத்தியும் கவலை இல்லை. கோடி போத்தறேன்.. கம்பளி போத்தறேன்னு வந்து கோட்டான கோடி தந்திரம்னுன்னு ஔறிக்கிட்டு இருக்கறது. குதிச்சு குதிச்சு குதியாட்டம் போட்டு பக்கத்திலருக்கவன் மண்டையை முட்றது. நீயெல்லாம் போய்டு.... உன்ன பாக்க நான் விரும்பல.."

கூட்டம் நடுங்கி வாசல் எங்கன்னு பார்க்க ஆரம்பித்திருந்தது.

"எல்லாருக்கும் சொல்றேன்... ஒழுங்கு மரியாதையா வந்தமா பார்த்தமா போனமான்னு இல்லாம உக்காந்து அனுதாபம் உருவாக்கி, வருகை போட்டுட்டு இருந்தா... கோத்தா...

தூக்கி போட்டு மிதிச்சிடுவேன். சீக்கிரம் இடத்த காலி பண்ணுங்க. இது வாடகை வீடு. வீட்டுக்காரங்க வந்து எல்லாரையும் தொரத்தறதுக்கு முன்னால எல்லாரும் போய் அவனவன் வேலைய பாருங்க.

கூப்டுடா பையன. தூக்குங்கடா..."

மீண்டும் பெட்டிக்குள் படுத்துக் கொண்ட அந்த அம்மாவின் கண்களில் ஈரம் கசியத் துவங்கியிருந்தது.

—

கவிஜி

---

# தணியாத வெப்பம்

கூரைவீடு கட்டும்
மேஸ்திரி வேலைக்கு
அப்பாவை விட்டால்
தோதான ஆளில்லை ஊரில்

அம்மியேப் பறக்கும்
ஆடிமாதக் காற்றிலும்
ஆண்டாண்டு மரங்களை
அடியோடு பெயர்க்கும்
கார்காலப் புயலிலும்
அசையாமல் நிற்கும்
அற்புதக் குடிசை கட்டும்
ஆற்றல்சாலி அப்பா

நாளாகிப் பிய்ந்துபோன
கூரையை மாற்றவும்
முழுவதுமாய் பிரிச்சிப்
புதிதாய் கூரை வேயவும்
நான் நீயென அலைமோதும்
கருக்கலிலும் விடியலிலும்
வாசலில் கூட்டம்

ஒருதரம் கட்டுனா
ஆறேழு வருசத்திற்கு
ஒருசொட்டு ஒழுவாது
ஊட்கூடு முறியாது
கடமையிலும்
கட்டுமான நேர்த்தியிலும்
கைதேர்ந்தவர் அப்பா

அக்கினிப்பட்டை
பனை நாரு
தேங்காய் நாரு
தென்னம்பாலை நாரு
தேய்ந்த சைக்கிள் டயர்
பனை ஓலை
தென்னங்கீற்றுச் சேர்த்து
எரவானம், பரணை கட்டி
கரும்பு சோலையோ
விழலோ வேய்ந்தார் என்றால்
குளிருக்கு வெதுவெதுப்பு
கோடையில் குளுகுளு
அன்றாடம் காய்ச்சிகளின்
அரண்மனையாகும் கூரைவீடு

பெருந்தனக்காரர்கள்
நிலக்கிழார்களின்
ஓடுவேய்ந்த வீடுகளைத் தவிர
சுற்றியுள்ள ஊர்களில்
அப்பாவின் கைவண்ணம்
வீதியின் இருபுறமும்
தேர்போல நிமிர்ந்து நிற்கும்

வீடுகட்டும் வேலையின்றி
மரம்வெட்டப்போன அப்பா
கைகால் முறிந்து வீடுவந்தார்
படுத்தப் படுக்கையாய்
ஆண்டுகள் ஓடின
அரசாங்கம் தந்தது
அவர்களே கட்டியதென
கம்பியும் சிமெண்டும்
மணலும் இறுகிய
செங்கல் சூளைகளுக்குள்
தணியாமல் வேகிறது
அன்பு அகதியாய்
பண்பு பரதேசியாய்.

## அழகிய மாநிறம்

அழகிய மாநிறம்
விழிகளை ஆண்டிட
அணியிழை மாதுளம்
அரவெனத் தீண்டிடும்

ஒளிமய நகையெழில்
உயிரினைச் சுவைத்திட
சிறகிமை சாமரம்
பௌர்ணமி வீசிடும்

நறுங்கனி இதழினம்
முறுவலால் மோதிட
மழலையர் மொழியிதம்
மனக்கிளை முறித்திடும்

கருகரு நெடுஞ்சடை
தவழ்ந்திடும் இருள்நதி
துறுதுறு குறும்புகள்
கடற்கரை அலைநுரை

குறுகிய நூலிடை
நரம்பினில் பிண்ணிட
பெருகிய பின்னெழில்
சமநிலை கொன்றிடும்

நடையிடும் மலர்ப்பதம்
மயில்குழு நாட்டியம்
கடைவிழி தரிசனம்
கடவுளின் மாட்சிமம்

வளரிளம் உருவளம்
வசீகரத் தேர்வலம்
குளிர்மலை பரிமளம்
குவிந்திடும் அதிசயம்

அமுதமும் தோற்றிடும்
இனிமையின் பேர்வரம்
குமுதமும் ஏங்கிடும்
குமரியின் குதூகலம்.

—

பொன். தெய்வா,
ஐவேலி.



# கார்த்திகை கவிதைகள்

கமழும் மண் மணத்தை
நுகரும் கணம்
மனம் முழுதும் மழையின்
ஆனந்த கீதம்.

/
எதிரியின்
வீரம் அறிய
நேருக்கு நேர் மோது.

/
கூடு திரும்பும்
பறவையின் மனதில்
குஞ்சுகளை காணும் ஆவல்.

/
நண்பகல் நேரம்
பொத்தல் கூரைக்குள்
அள்ளமுடியாத நட்சத்திரங்கள்.

/
பாதி நிலா
கோப்பையில் மது
மீதி நிலா முற்றத்தில்.

/
சரக்கு ரயில்
தொடர் பயணம்
வரிசையில் எறும்புகள்.

/
என் இதயத்தின் ஒரு பாதியை
நான் திறந்து விட்டேன்.



மறு பாதியை நீ திறந்து
விடு.
தடையின்றி வரட்டும்
காதல்.

/
நேற்றைய முகத்தை
இன்று கழுவுகையில்
தொலைந்தது என் கனவுமுகம்.

/
பகலில் இரவும்
இரவில் பகலும்
உறங்குவதாய் ஒரு நம்பிக்கை.

/
யாரோ ஒருவன் தன்னை
ரசிக்கவில்லை என்பதற்காக
என்றுமே அழுததில்லை மழை!!!

/
செத்துக் கிடக்கிறான்
குடிகாரன்.
துக்கம் ததும்பும்
முகங்கள் தோறும்
சாராயநெடி மயக்கம்.

/
வெட்கம் சுமந்தபடி
பயணிக்கும் அவளிடம்
காதலை யாசித்து
நிற்கிறேன்.
என் மனம் நிறைய
மெல்லிய புன்னகையை
பரிசளித்துப் போகிறாளவள்.

/
மார்வாடிக் கடையிலும்
அடகு வைக்கலாம்
மங்கை
அவள் சேட்டைகளை!

—

பாரியன்பன் நாகாஜன்,
குடியாத்தம்.
கைப்பேசி: 9443139353

---

# என்னுயிரே

அன்புடை நெஞ்சம்
அலைகழிந்து தவிக்குதடா //
என்னவன் வளம்தேடி
அயலகம் போனான்//

கடிதில் வருவேன்
கலங்காதிரு என்றவன்//
சிறுபொழுது பெரும்பொழுதென
காலம் கடந்தனவே //

மான்விழியாள் என்றவன்
தேன்மொழியாளென புகழ்ந்தான்//
ஏகாந்தமாய் என்னோடு
பொழுது கழித்தவன்//

அன்னவன் எங்கிருப்பானோ
எப்படி இருப்பானோ//
தன்னுடைய நலம்
பேணி வருகிறானோ //

என்னுயிரே உன்னைக்
காணாமல் உள்ளமும்//
என்னுடலும் வாடி
இருப்பதை அறிவாயா//

காற்றாய் சுழன்று
காதலோடு வா//
அன்பின் ஊற்றாய்
அரவணைக்க வா//

—

ஆக்கம்:
செ. இலட்சுமணக்குமார்
ஈரோடு

குறிப்பு:

கடிதில்
- விரைந்து வருதல்

சிறுபொழுது
- ஒரு நாளுக்குரிய அறு பொழுதுகள்

பெரும்பொழுது
- ஒரு ஆண்டுக்குரிய ஆறு பருவங்கள்

# கானல் நான்

எங்கு எப்போது
என தெரியவில்லை
நகருதல் நின்றது
உலருதல் என்றது
ஊர்ந்து திரிய உருவம் எங்கே
மினுங்குதல் காணோம்
முன்னொரு காலமென்ற
சொல்லும் இல்லைதான் போல
அலைந்து தேடும்
கால்களுக்கடியே
பிளந்து கிடக்கும்
வயிறு காய்ந்த நதியின் விழி
கெட்டித்த ரத்தமென நீளும்
மயானமோ
தலைதூக்கி வெகு நேரம்
காண்கிறேன்
பலகையில் இன்ன நதி என
எழுதியிருக்கும் பெயரில்
கானல் நான் மினுமினுக்கிறேன்.....!

------

## தேநீர் இடைவேளை

நிரம்ப காலியாகும்
நினைவுக் கோப்பைக்குள்
பின்வானக் கோடுகளை
யாரோ ஈசிக்கிறார்கள்

ஊற்ற ஊற்ற வழியும்
நரம்பின் யாழ்த்தனத்தை
சங்கேத குறியீடுகளால்
நிமிண்டப் படுகிறது

மிளகு தூக்கலாக ரசம் உரிய
வந்த பேராசையை
பிசைந்து கொள்ளும் நட்சத்திரங்கள்
நாள் பட்ட கொப்புளங்கள்

தலை வெடித்து சாக
சாபம் வாங்கிய சாமக்கோடங்கியோடு
ஓடிப்போகும் சிந்தனையில்
மீண்டும் மீசை முளைக்கிறது

வெண்ணிற இரவின் வழியே
பால்வீதிக்கு சாலை போடும்
ஒட்டைக் கால்காரிகள் சிலரோடு
முத்தமிடும் ஆசையை
சிறுநீர் கழித்தும் போக்கலாம்

நள்ளிரவுக்கு பல்லிளிப்பு அதிகம்
அல்லலுறும் ஆன்ம குடுவைகளின்
நிமித்தம் முக்கால்வாசி நீரும்
கால்வாசி நுரையுமாக
இது தேநீர் இடைவேளை....!

------

## முன் சொன்னவைகள்

சுருண்டெழும் சூரியன் அறியா
உலகம் தேடும் பறவை பட்சி தெரியா
தூரத்தில் கேட்பதாக இருக்கும்
ஏதோ ஒரு குரலின் வசவுச் சொல்லில்
எறும்பு கடிக்கும்
பசிக்குள் புரண்டு படுக்கையில்

அந்த நான்கு இட்லிகள்
பரிதாபமாய் காய்ந்து கருகும்
உள்ளே முளைக்கும் முள்காட்டில்
ஊன் உருகும் முன் ஜென்மங்கள்
சுய பச்சாதாப முடைகள்
கட்டிலுக்கடியே நீதி பேசும்
நிரம்ப தவிர்க்கும் உயிரை
கழுத்துக்குள் அடைகாத்தல் வலி
புரண்டு படுக்கவும் தயங்கும் சப்தம்
நிமிர்ந்து நீட்டவும் பத்தாது தூக்கம்
மிச்சத்தை நாளை காலை சொல்கிறேன்
இன்றைக்கும்
விடிந்த பின்னும் தூங்குகையில்
எல்லாமே முன் சொன்னவைகள் தான்

------

## ஒரு துண்டு வானம்

நடுக்கடலில் ஒரு தலைகீழ் உண்டு
வானம் கொத்திய சதுர வட்டம்
சம்பிரதாயம் தாண்டியது
நீலம் கவிழ்த்திய படகின் குகையை
நீட்டி மடித்த நிகழ் அது
கைகால் உதைத்தழும் இரவுக்கு
திரும்பும் பக்கமெல்லாம்
கைகளும் கால்களும்
நிரம்ப குடித்து வீங்கி சரிந்த வயிறும்
இருள் பூச திசை அறியா துயரம்
நீர் காடு அசையாமல் கடக்க
நீண்டு கமறும் இருமலுக்கு
இன்னொரு பெயர்
நேற்று தொலைந்தவனின் கடல்
கண்டெடுக்க இயலாமல் திரும்பி
கடலோடு புரண்டவனுக்கு
கடலில் கிடைக்கிறது
இன்றும் ஒரு துண்டு வானம்

------

## ஒரு கவிதை போதும்

இறுதிவரை வருவது பற்றி
சிந்தனை இல்லை
இலகுவானது எதுவென
யோசிப்பதில்லை
மரமேறி நிலா பறிக்கலாம்
மனமேறி மலர்கள் பறிக்கலாம்
சிறு புன்னகைக்கு
கண்ணாடி குரங்காகலாம்
சிலந்தி வலை குறியீடு
சித்திரம் பூக்கிறது
நான் அற்ற தானை
ஷூ லேசில் அவிழ்த்து விடுகிறேன்
இலை உதிர்ந்த காலத்துக்குத் தெரியாது
இசைபட தட தடக்கும் இவன் மரத்தடி
தளிர்மனம் குளிர
தகிக்கும் சொற்களற்று
மௌனம் பூசி அமர்கிறேன்
சிறுபிள்ளை கைநீட்டல்
பசிக்க செய்கிறது
கூடவே உரக்க சொல்கிறது
நம்பிக்கைக்கு ஒரு கவிதை போதும்
நம்பாததுக்குத்தான்
நான்கு பக்கம் எழுத வேண்டும்

—

கவிஜி

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.